

# Southern Builder

Bulletin of Builders Association of India - Southern Centre

For Private Circulation only

August 2020

## Our Tribute to
## MR. PRANAB MUKHERJEE
## Former President of India




**"You are a great source of strength and leadership"**

**We, Builders Association of India were fortunate and privileged to have**

**MR. PRANAB MUKHERJEE**

**the then Union Finance Minister**

**to inaugurate XXIV All India Builders Convention in**

**Chennai on 23-01-2011**

# Jayaraj International (P) Ltd.,

jayaraj
*Leaders in Timber*

(an ISO Certified Company 9001:2008)

**Teak wood Logs | Teak Sizes | Door & Window Frames**
**Hard wood Logs & Sizes | Teak Planks | Doors**

*Leaders in Teak Wood*



**T. Raja Sekhar**
Managing Director

**Timber Yard :** 19, Puzhal Union Road, Vadaperumbakkam, Chennai - 600 060.

**Corporate Office :** 12/1, First Floor, United India colony, 4th Main Road, Kodambakkam, Chennai - 600 024.

**Contact** : 09840070992, 09840815812, 09382666666, 07092212666

**Email Id** : jayarajenquiry@gmail.com | **Website:** www.jayarajtimber.com















# Southern Builder

Bulletin of Builders Association of India - Southern Centre

For Private Circulation only

Offical Journal of Builders' Association of India - Southern Centre. August 2020

**Builders' Association of India**
**Southern Centre**
Plot No. A1, 1st Main Road, Opp. to AIEMA, Industrial Estate, Ambattur, Chennai - 600 058.
(T) 044-2625 2006 | (E) baisouthern1950@gmail.com | (W) www.baisouthern.com

## OFFICE BEARERS - 2020-2021

| | | |
|---|---|---|
| Mr. L SHANTHAKUMAR | - | Chairman |
| Mr. R R SHRIDHAR | - | Vice Chairman |
| Mr. A N BALAJI | - | Hon. Secretary |
| Mr. R NIMRODE | - | Hon. Joint Secretary |
| Mr. N G LOKANATHAN | - | Hon. Treasurer |
| Mr. S RAMAPRABHU | - | Imm. Past Chairman |

## EDITOR
Mr. S AYYANATHAN
98410 46799

## EDITORIAL BOARD
Mr. L VENKATESAN
Mr. S D KANNAN
Mr. P K P NARAYANAN

## ADVISORS
Mr. Mu MOAHAN
National President - BAI

Bhisma. R RADHAKRISHNAN -
All India Past President & Trustee - BAI

Mr. J R SETHURAMALINGAM
All India Past Vice President & Trustee - BAI

## CONTENTS

ஆசிரியர் மடல் 04

மய்யத்தலைவர் மடல் 05

Decoding Tax Reforms as announced by Hon'ble PM 06

கட்டிடக் கலையும் நாகரிகமும் 16

Soil Science behind the Preparation of Cricket Pitch 20

Corrosion Control of Steel Reinforcement Rods in Concrete 27

New Patron Members 33

CPWD-Plinth Area Rates 2020 34

உயர்ந்த எண்ணங்கள் 41

Southern Centre Activities 42

Membership Application Form 45

**TARIFF**

| Si. No. | Description | Rate Per Issue | Rate Per Annum |
|---|---|---|---|
| 1. | Multi Colour A4 Size Rear Cover Outer | Rs.30,000/- | Rs.3,00,000/- |
| 2. | Multi Colour A4 Size Front Cover Inner / Rear Cover Inner | Rs.20,000/- | Rs.2,00,000/- |
| 3. | Multi Colour A4 Size Inner Page | Rs.15,000/- | Rs.1,50,000/- |
| 4. | Multi Colour A4 Size Half Size Inner Page | Rs.10,000/- | Rs.1,00,000/- |
| 5. | Black & White A4 Inner Page | Rs.10,000/- | Rs.1,00,000/- |
| 6. | Black & White A4 Half Page Inner Page | Rs.6,000/- | Rs.60,000/- |

Extra 5% GST

Disclaimer

The Materials Provided in this Publication are a free Service to its readers. No copyright Violations are intended. Views expressed in this publication are not necessarily of BAI. No direct or indirect or consequential liabilities are acceptable on the information made available herein.



# ஆசிரியர் மடல்

அன்புடையீர் வணக்கம்,

கோவிட்19 எனும் கொரோனாவின் கொடிய நோயிலிருந்து மக்களை காப்பாற்றுவதற்காக மத்திய மாநில அரசுகள் விதித்த கட்டுப்பாடுகள் பெரும்பாலும் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. அன்றாடம் வேலைக்குச் சென்று பிழைப்பு நடத்திய மக்கள், சிறு தொழில் முனைவோர், கட்டுமானத்துறை என்று அனைத்துத் துறைகளும் ஒரு நாட்டின் இயக்கமே ஸ்தம்பித்துப் போய் இருக்கும் நிலையில், விரைவில் E-Pass ரத்து, பேருந்து போக்குவரத்து தொடக்கம், இரயில் போக்குவரத்து என்று மக்களின் அன்றாட நகர்வுகளுக்கு வழி ஏற்படுத்தப்படும் என்று எண்ணி மக்கள் சிறையில் இருந்து விடுபட்டு சுதந்திர காற்றை சுவாசிக்க எண்ணி ஏங்குகின்றனர்.

கட்டுப்பாடுகள் அனைத்தும் விலக்கிக் கொள்ளப்பட்டாலும், மக்கள் தங்கள் சுயக்கட்டுப்பாட்டை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்பது மிகவும் அவசியம். முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளி மற்றும் மருத்துவர்களின் அனைத்து அறிவுரைகளையும் கடைபிடித்து நடந்தால் தான் கொரோனாவின் கோரப் பிடியில் இருந்து தப்பித்து இயல்பு வாழ்க்கையை நடத்த முடியும் என்பது அனைவருக்கும் அவசியமான ஒன்றாகும்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரே நாடு ஒரே வரி என்ற முழக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட GST என்னும் வரிவிதிப்பு முறையானது. முறையான ஆய்விற்கு பிறகு செயல்படுத்தாமல் அவசரக் கோலத்தில் நடைமுறைபடுத்தியதால் பல சிக்கல்களை தொழில் முனைவோரும் நாடும் எதிர்கொண்டிருக்கிறது. அனைத்து வரிகளும், GST என்கிற பொது வரி விதிப்பின் கட்டுக்குள் உள்ளாக்கப்பட்டதால் மாநில அரசுகள் பெரும் இழப்பை சந்திப்பதாக கூறப்படுகிறது. மாநில அரசுகளின் வரி இழப்பை ஈடு செய்ய வேண்டியது மத்திய அரசின் பொறுப்பு என்பதில் மாற்று கருத்து இருக்க முடியாது. ஆனால் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் மாநில அரசுகளின் நிவாரணதொகையில் ஏற்பட்ட குறைவை மத்திய அரசால் சரிகட்ட முடியாது என்று கூறி இருக்கிறார். காரணம் வசூலாக வேண்டிய GST இலக்கு மிகக் குறைவாகவே வசூலாகி இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி மாநில அரசுகளுக்கு கடன் பெற்றுக் கொள்ள அனுமதி அளித்து எல்லாம் கடவுள் செயல் என்று கொரோனோ பெருந்தொற்றை காரணமாக கூறிவிட்டார். பல்வேறு மாநிலங்கள் தமிழ்நாடு உட்பட இதனை நிராகரித்துள்ளன.

ஸ்தம்பித்துப்போன இந்த பொருளாதார நிலையை சரி செய்வதும் மாநில அரசுகளுக்கு உரிய நிவாரணங்களை வழங்குவதும், அதிகாரங்கள் அனைத்தையும் பெற்றிருக்கின்ற மத்திய அரசையே சேரும். மக்களின் நுகர்வு சக்தியை பெருக்குவதற்கும் இந்த பொருளாதார சீரழிவில் இருந்து நாடு மீண்டு வர வேண்டும் என்பது தான் அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

நமது கட்டுமானத்துறை பல வழிகளிலும் இழப்பை சந்தித்து இன்றைய தினம் இயல்பு நிலைக்கு வருவதற்கு எடுக்கப்படுகின்ற அனைத்து முயற்சிகளும் மத்திய மாநில அரசுகளின் ஊக்குவிப்பு மற்றும் சலுகைகளுடன் மீண்டு எழுவோம் என்ற நம்பிக்கை மற்றும் மன உறுதியுடன் செயலாற்றி வெற்றி காண்போம்.

என்றும் அன்புடன்
S. அய்யநாதன்



# மய்யத்தலைவர் மடல்

அன்புடையீர் வணக்கம்

கொரோனா என்னும் சொல் நமக்கு மிகவும் பழகிவிட்ட சொல்லாகவும், பரிட்சயமான சொல்லாகவும் ஆகிவிட்டது. அரசு நமக்கு எல்லாவிதமான தளர்வுகளையும் அளித்துவிட்டாலும், நாம் நமக்கு என்று ஒரு சுய கட்டுப்பாட்டை விதித்துக் கொண்டு, நமக்கும் நமது குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படாவண்ணம் பாதுகாப்பாக நடந்து கொள்ள வேண்டும் என்பதுதான் நிதர்சமான உண்மை.

இன்று ஒரு சிறிய கதையை கூற இருக்கிறேன். ஒரு ஊரில் ஒரு சிறந்த சிற்பி இருந்தார். அவர் வடிவமைக்கும் சிற்பத்திற்கு நிறைய பணம் கொடுத்து வாங்கி செல்வதற்கு ஏகப்பட்ட மக்கள் காத்திருந்தனர். அவரிடம் ஒரு பாலகன் வந்து சீடனாக தன்னை சேர்த்துக் கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொண்டான். அவரும் அந்த பாலகனை சீடனாக சேர்த்துக் கொண்டு சிற்ப கலையை சிறப்பாக சொல்லிக் கொடுத்தார். நாளடைவில் அந்த பாலகன் மிகவும் சிறப்பான சிற்பியாக செயல்பட்டான்.

ஆனால் அந்த குருவோ எப்பொழுதும் பாராட்டிவிட்டு சிறு சிறு குறைகளை சுட்டி காண்பித்துக் கொண்டு இருந்தார். அந்த சிறுவனும் பொறுமையாக குரு கூறிய குறைகளை நிவர்த்தி செய்து வந்தான். அதனால் நாளடைவில் குரு விற்கும் சிலையை விட சீடனின் சிலைக்கு நிறைய விலை கிடைத்தது மேலும் அனைவரின் பாராட்டுதலும் அவனுக்கு கிடைத்தது. குருவின் சிலைகளுக்கு பழைய மவுசு கிடைக்கவில்லை. ஆனாலும் குரு அதே போல சீடன் வடிவமைக்கும் சிலைகளில் ஏதோ ஒரு குற்றம் கண்டுபிடித்து சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தார். சீடனுக்கு இப்பொழுது கோபம் வந்து விட்டது.

அதனால் குருவிடம் நீங்கள் வடிவமைக்கும் சிலையை விட என்னுடைய சிலைக்குத்தான் அதிக பணமும் வரவேற்பும் கிடைக்கிறது. அதனால் நீங்கள் குறைகள் கூறுவதை நிறுத்திக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டான். அதிலிருந்து குருவும் சீடன் வடிவமைத்த சிலையில் உள்ள குறைகளை சுட்டிக்காட்டவில்லை. சில நாட்கள் கழித்து சீடன் வடிவமைத்த சிலைகளை வாங்க யாரும் முன்வரவில்லை. அதனால் வேதனை அடைந்த சீடன், குருவிடம் சென்று ஏன் என் சிலைகள் சமீபகாலமாக விற்கவில்லை என்று கேட்டான். அதற்கு குரு உன்னைப் போல் நானும் சிறு வயதில் என் குரு கூறிய அறிவுரையும், குறைகளையும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம், எனக்கு எல்லாம் தெரியும் என்ற ஒரு தவறான எண்ணத்திலும்,தலைகனத்திலும் எல்லாவற்றையும் நிராகரித்தேன் என்று கூறினார்.

தன் தவறினை உணர்ந்த சீடன் மன்னிப்பு கேட்டு தொடர்ந்து குறைகளை சுட்டிக் காண்பிக்குமாறு குருவிடம் பணிவுடன் கேட்டுக் கொண்டான். குருவும் தொடர்ந்து தன்னுடைய கருத்தினை சீடனிடம் கூற மறுபடியும் சீடன் வடிவமைத்த சிலைகள் நல்ல விலைக்கு விற்பனையானது.

அதே போல்தான் நம் வாழ்க்கையில் நம்மைவிட அனுபவம் வாய்ந்தவர்க் கூறும் அறிவுரைகளை ஏற்று செயல்பட்டால் நாம் எல்லாவற்றிலும சிறப்பாக செயல்பட முடியும் என்பதுதான் நிதர்சனமான உண்மை.

வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பாடம் கற்றுக் கொள்கிறோம். நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதர்களும் நமக்கு ஒரு பாடத்தை கற்பிக்கின்றனர்.

என்றும் அன்புடன்
L. சாந்தகுமார்

# DECODING TAX REFORMS AS ANNOUNCED BY HON'BLE PM



திரு. S.D. கண்ணன்
Taxation Committee

## TAX REFORMS ANNOUNCED BY HON'BLE PM ON 13.08.2020

- Prime Minister Launched The Platform For "Transparent Taxation – Honoring The Honest" Via Videoconferencing On 13th August 2020
- Key Announcements In The Pm Speech
  - ✓ Taxpayers' Charter
  - ✓ Faceless Assessments To Be Made Effective From 13.08.2020
  - ✓ Faceless Appeals To Be Made Effective From 25.09.2020
  - ✓ Extending Scope Of Sft (Notification To Be Issued)
- Statutory Orders To Give Effect Of Pm Announcements
  - ✓ Order U/S 119 Dt 13.08.20 -Power Of Survey U/S 133a
  - ✓ Order U/S 119 Dt 13.08.20 – Faceless Assessment
  - ✓ Transfer Order Dt 13.08.20 Wherein Number Of Field Officers Transferred Under NeAc
- In This Presentation, We Have Tried To Explain The Implications Of Above Tax Reforms

## NO POWER OF ASSESSING OFFICER TO CONDUCT INCOME TAX SURVERY

- Simultaneous with Hon'ble PM Speech, CBDT has come out with an order u/s 119 dated 13. 08. 2020, in terms of which Income Tax Survey can only be carried out by DGIT (Inv) for investigation wing and Pr. CCIT/CCIT(TDS) for TDS charges henceforth.

- Thus, in terms of aforesaid order, henceforth Income Tax Surveys can only be done by Investigation Wing. This is a welcome step as henceforth Survey operations shall normally be done for serious tax evasions.

- It may be noted that in terms of insertion of Section 133A(2A) from 01 .10. 2014, the Power of TDS Officers in case of Survey had been restricted. Thus, in case of TDS Surveys, the TDS officers have been empowered to restrict their scope to verify TDS/TCS provisions. Thus, they have no power to make inventory of stock, place identification on records, impound books of accounts etc.

## INCOME TAX DEPARTMENT WATCHING YOU THROUGH SFT

- SFT (Specified Financial Transaction) is a report filed by 'specified persons' under Section 285BA of I.T.Act, which records transactions exceeding threshold limit, including Investments and expenditures done by taxpayers in a FY.

- Under existing reporting system, Banks and financial institutions used to share information about high-value transactions recorded in SFTs with tax authorities.

- In July 2020, the government had launched a revised Form 26AS which included high-value transactions from SFTs from this assessment year, which would be now directly visible to the taxpayer at the time of filing of Income-tax returns

## List of existing SFT

- Cash Deposits > Rs. 10 lacs in saving bank account
- Purchases of bank drafts, pay orders, etc >Rs 10 lakh in FY
- Cash payment made for FD > Rs 10 lakh in a FY
- Cash deposit or withdrawal > Rs. 50 Lakh current account in a FY
- Cash received >Rs. 2 Lakh for sale of goods or rendering of services.
- Expenditure in foreign currency via debit card, credit card or traveler's
- cheque >10 lakhs in FY
- Payment by credit card >Rs.10 Lakh in FY
- Credit card bill paid in cash >Rs 1 lakh in FY
- Purchase/sale of immovable property, stamp duty value>Rs.30 lacs
- Mutual Fund Investment >Rs 10 lakh in FY
- Purchase of bonds or debentures >Rs 10 lakh in FY
- Purchase of shares through the public offer or right issue >Rs 10 lakh
- Share buy-back from a person >Rs. 10 lakhs

## Proposed transactions to be covered under SFT (as released on 13.08.20)

- Payment of educational fee/ donations above Rs 1 lakh per annum
- Payment to hotels above Rs 20,000
- Purchase of jewellery, white goods, marbles,paintings, etc >Rs 1 lakh
- Life insurance premium over Rs 50,000
- Payment of property tax above Rs 20,000 per annum
- Electricity consumption above Rs 1 lakh per annum
- Health insurance premium above Rs 20,000
- Deposits/credits in current account above Rs 50 lakh
- Deposits/ credits in non-current account above Rs 25 lakh
- Domestic business class air travel/ foreign travel
- Share transactions/ demat accounts/ bank lockers

## COMPULSORY FILING OF RETURN

The government also proposes compulsory filing of returns by

- A person having bank transactions over Rs 30 lakhs
- payment of rent over Rs 40,000
- All professionals and businesses having turnover over Rs 50 lakhs.

## IMPLICATIONS OF PROPOSED CHANGES IN SFT REPORTING

- For Income Tax Department, these measures are aimed at watching consumption and investment pattern of assessee and matching with their return profile.

- The responsibility of capturing the data and informing to Income Tax Department has been vested to the Vendor of goods and services who is supposed to have necessary infrastructure to capture the information.

- The Income Tax Department will get information from various sources like shopping platforms, Electricity companies, Banks, Hotels, Insurance Companies, Educational institutions, Charitable organizations etc.

- Once the CBDT releases the Notification in this regard, the Department shall start getting multiple information's through SFT

## FACELESS ASSESSMENT SCHEME PRESENT AND FUTURE

### E-assessment Scheme (applicable up to 12.08.2020)

- Section 143(3A) to 143(3C) were inserted by Finance Act 2018– these sections gave power to CG to make a scheme for e-assessment by notification in official gazette

- Subsequently on 7-10-2019, E-Assessment scheme launched by Revenue Secretary, with the inauguration of the National e-Assessment Centre (NeAC) at New Delhi.

- Even after launch of the said Scheme, practically, most of the assessments are still being done, wherein assessee or his a/r appear physically before jurisdictional assessing officers. This was because, many types of assessments (for instance order u/s 147, 144 etc) were not covered under the Scheme. Even otherwise, not all scrutiny cases were transferred to NeAC

### Faceless assessment Scheme (applicable from 13.08.2020)

- Now excepting some assessments (Search cases and International Tax cases), all assessments will be under Faceless Assessment Scheme, where there cannot be any interface between AO and assessee.

- Assessment orders which are not in conformity with the Faceless Assessment Scheme shall be treated as Non-Est.

- The PCCIT or PDGIT, in charge of National e-assessment Centre, may at any stage of the assessment, if considered necessary, transfer the case to AO having jurisdiction over such case, with prior approval of Board.

## E-ASSESSMENT VS FACELESS ASSESSMENT

| E- Assessment (upto 12.08.20) | Faceless Assessment (From 13.08.20) |
|---|---|
| Applicable only in relation to assessment proceedings under section 143(3). | All income tax cases picked up for scrutiny, except those relating to search & seizure as well as international tax charges. |
| Thus, it is seen that the following categories of assessments are kept outside the purview of E-Assessment:<br>a. Reassessment u/s. 147.<br>b. Search Assessment u/s 153A<br>c. Best judgment assessment u/s. 144<br>d. Cases related to International Tax | Thus, it is seen that following categories of assessments are kept outside the purview of Faceless Assessment:<br>a. Search Assessment u/s 153A<br>b. Cases related to International Tax |

## FACELESS ASSESSMENT – SALIENT FEATURES

- Scrutiny Selection only through automated system using Data Analytics and Artificial Intelligence- Thus no manual involvement in selection for Scrutiny
- Abolition of territorial jurisdiction – Thus the AO shall be situated in other cities and the assessee may not be able to know who is the AO.
- Central issuance of notice with DIN – Thus, all notice can be issued by Income Tax Department will have trials
- No physical interface, no need to visit Income Tax office – Thus, all reply by assessee should be submitted electronically
- Team based assessments and team based review – Thus, Draft assessment order in one city, review in another city and finalization in third city
- 2/3rd of department's manpower for faceless assessments and balance for other functions

## FACELESS ASSESSMENT IN INDIA – EVOLUTION

2015 – Introduction of e-proceedings on pilot basis in New Delhi and Mumbai

2017- E-proceedings scheme extended to other cities
- option provided to tax payer to opt for such proceddings

2018 - Formal sustem of e-assessment announced in Budget
- E- Proceeding made mandatory for all tax payers - with certain exceptions

2019- E-Assessment scheme notified
- introduced in phased manner
- Notices issued for AY 2018 - 19 and AY 2017 - 18 (for belated / revised return)

2020 - Faceless Assessment Scheme Notified

## FACELESS ASSESSMENT SCHEME COMMUNICATION




## NATIONA E-ASSESSMENT CENTRE DELHI



## DIVERSION OF MANPOWER TO FACELESS ASSESSMENT CHARGES

| PARTICULARS | FACELESS ASSESSMENT CHARGES | RESIDUAL JURISDICTION |
|---|---|---|
| CCIT | 30 | 32 |
| PCIT | 154 | 96 |
| Addl / Joint CIT | 565 | 252 |
| DCIT / ACIT | 654 | 261 |
| ITOs and attendant staff | 2830 | 1274 |
| **TOTAL** | **4224** | **1915** |

## E- ASSESSMENT CENTRES AND UNITS (1)

| PARTICULARS | PAST – TILL 12.08.2020 | FUTURE- W.e.f 13.08.2020 |
|---|---|---|
| PCIT | 4 | 11 |
| Additional CIT | (4*4) = 16 | (11*4)=44 |
| DCIT / ACIT | (4*4)= 16 | (11*4)=44 |
| ITO | (4*4*2)= 32 | (11*4*5)=220 |
| **TOTAL** | **58** | **319** |

## E- ASSESSMENT CENTRES AND UNITS (1)

| CENTRE NAME | DESCRIPTION |
|---|---|
| National e-Assessment Centre ('NeAC') | Facilitate conduct of e-assessment proceeding in a centralized manner, vested with jurisdiction to make assessment |
| Regional e-assessment Centres ('ReAC') | Facilitate conduct of e-assessment proceedings, vested with the jurisdiction to make assessment |
| Assessment Units | To perform the function of making assessment which includes identification of material points/issues in the ITR , seeking information/ clarification on such points , analysis of material furnished by Assessee and making of draft order |
| Verification Units | To perform function of verification including enquiry, cross verification, examination of b/a, recording of statement, witness etc. |
| Technical Units | To provide technical assistance which includes assistance/ advice on legal, accounting , forensic, valuation , transfer pricing etc. |
| Review Units | To review the draft assessment order i.e. to check whether the relevant facts, legal points & judicial pronouncements etc. have been properly incorporated in the draft assessment order. |

**Procedure of Faceless Assessment**



## FUNCTIONS OF THE FIELD OFFICERS

As mentioned in earlier slide henceforth 2/3rd of Department officer shall perform Faceless assessments. The balance 1/3rd officers (field officers) will perform the following functions in faceless manner to the extent possible:-

- Taxpayer outreach and taxpayer education
- Rectification proceedings
- Grievance handling.
- Demand Management.
- Collection and Recovery of taxes.
- Statutory powers under section 263 / 264 of the Act
- Prosecution and compounding proceedings
- Administrative, HRD and cadre control matters
- Custody and management of Case records.
- Management and control of infrastructure.
- Audit functions including handling matters pertaining to Revenue and Internal Audit and taking remedial actions
- Judicial functions including giving effect to appellate orders of CIT(A), ITAT, HC, SC, Settlement commission; filing of appeal wherever considered necessary; defending writ petitions; recommendation of SLPs etc.

## TAXPAYERS' CHARTER

- Finance Minister on 01 . 02. 2020 in bud get speech explained the requirement of giving Statutory force to Tax payer s' Charter and relevant extracts of the speech reads as under:

  "Any tax system requires trust between taxpayers and the administration. This will be possible only when taxpayer's rights are clearly enumerated. Towards this end, and with the objective of enhancing the efficiency of the delivery system of the Income Tax Department, I propose to amend the provisions of the Income Tax Act to mandate the Central Board of Direct Taxes ( CBDT) to adopt a Taxpayers' Charter. The details of the contents of the charter shall be notified soon."

- Subsequently Finance Act, 2020 inserted section 119 A, with effect from 01 - 04 - 2020 , to empower CBDT to adopt and declare a Taxpayer' s Char ter.

- Now, on 13th August 2020 , the Hon'ble Prime Minister unveiled country ' s first charter of taxpayer s ' rights and duties.

- CBDT has issued Citizen' s Charter from time to time, ( last revised on 29 - 4 - 2014 ), for standards of service delivery, grievance redressed, etc. However, the same never ha d statutory backing and didn't' form par t of Statute Book .

- Though the Taxpayer s ' Charter in the present form is too generic in nature, b u t the intentions are worth praising. Many countries have already implemented Tax payer's Charter including Australia, Canada, Malta, New Zealand , Kenya, etc . In country like UK ,
  Taxpayer Charter has statutory backing.

## TAXPAYERS' RIGHT – DEPARTMENT OBLIGATIONS

| TAXPAYER'S EXPECTATIONS | DEPARTMENT'S OBLIGATIONS |
|---|---|
| Provide fair, courteous, and reasonable treatment | The Department shall provide prompt, courteous, and professional assistance in all dealings with the taxpayer. |
| Treat taxpayer as honest | The Department shall treat every taxpayer as honest unless there is a reason to believe otherwise. |
| Provide mechanism for appeal and review | The Department shall provide fair and impartial appeal and review mechanism. |
| Provide complete and accurate information | The Department shall provide accurate information for fulfilling compliance. |
| Provide timely decisions | The Department shall take decision in every income-tax proceeding within the time prescribed under law. |

## TAXPAYER CHARTER IS COMMITTED TO:-

| TAXPAYER'S EXPECTATIONS | DEPARTMENT'S OBLIGATIONS |
|---|---|
| Provide mechanism to lodge complaint | The Department shall provide mechanism for lodging a complaint and prompt disposal thereof. |
| Provide a fair & just system | The Department shall provide a fair and impartial system and resolve the tax issues in time-bound manner obligations under the law. |
| Publish service standards and report periodically | The Department shall publish standards for service delivery in a periodic manner |
| Reduce cost of compliance | The Department shall duly take into account the cost of Compliance when administering tax legislation. The Department shall allow every taxpayer to choose an Authorized representative of his choice. |
| Collect the correct amount of tax | The Department shall collect only the amount due as per the law. |
| Respect privacy of taxpayer | The Department will follow due process of law and be no more intrusive than necessary in any inquiry, examination, or enforcement action. |
| Maintain confidentiality | The Department shall not disclose any information |
| Hold its authorities accountable | The Department shall hold its authorities accountable for Their actions. |
| Enable representative of choice | The Department shall allow every taxpayer to choose an Authorized representative of his choice. |

## INCOME TAX DEPARTMENT EXPECTATION:-

| TAXPAYER'S EXPECTATIONS | DEPARTMENT'S OBLIGATIONS |
|---|---|
| Be honest and compliant | Taxpayer is expected to honestly disclose full information and fulfill his compliance obligations. |
| Be informed | Taxpayer is expected to be aware of his compliance obligations under tax law and seek help of department if needed. |
| Keep accurate records | Taxpayer is expected to keep accurate records required as Per law. |
| Know what the representative | Taxpayer is expectedto know what information and submissions |

| | |
|---|---|
| does on his behalf | are made by his authorized representative. |
| Respond in time | Taxpayer is expected to make submissions as per tax law in Timely manner. |
| Pay in time | Taxpayer is expected to pay amount due as per law in a Timely manner. |

**FACELESS APPEALS:-**

- Finance Minister in Budget 2020 announced the introduction of Faceless Tax Appeals in Income Tax Act 1961 on the lines of Faceless Assessment

- As announced by Hon'ble PM today, CBDT will launch faceless appeals beginning 25th September 2020 (incidentally the birth anniversary of Deen Dayal Upadhyay) as part of the process to reduce physical interface between tax officers and taxpayers.

- Appeals will be allotted at random to officers, taxpayers will not need to visit offices or meet any officials, the identities of the officers deciding the appeal will remain unknown, the appellate decision will be team- based and reviewed.

- Exceptions to Faceless Appeal : Cases relating to
  - ✓ Appeal includes, serious frauds, major tax evasion, sensitive and search matters.
  - ✓ International Taxation and
  - ✓ Black Money Act & Benami Property

---

- மனிதன் சொல்ல இறைவன் கேட்பது - திருவாசகம்
- இறைவன் சொல்ல மனிதன் கேட்பது - கீதை
- மனிதன் சொல்ல மனிதன் கேட்பது - குறள்
- அருளாளன் சொல்ல ஞானிகள் கேட்பது - திருவருட்பா
- ஞானிகள் சொல்ல ஞானிகள் கேட்பது - திருமந்திரம்
- மகன் சொல்ல மகேசன் கேட்பது - பிரணவம்
- மனைவி சொல்ல கணவன் கேட்பது - வாழ்க்கை



Er.A.G.Marimuthuraj

# கட்டிடக் கலையும் நாகரிகமும்

ஏறத்தாழ 2500 ஆண்டுகுளுக்கு முன்னரே தோன்றிய நம்முடைய முன்னோர்களின் கலைஞானம் போற்றுதலுக்குரியது. அவை அனைத்தும் கடல் போன்று எல்லையற்றும், மிகுந்த ஆழமானதும் கூட அவைகளை நம்மால் முற்றிலும் அறிந்து கொள்ள முடியாத அளவிற்கு, பரந்து, விரிந்து காணப்படுகின்றது என்றால் அது மிகையாகாது.

மனிதனுடைய மனத்தில் இன்பம் பெருக்கெடுக்கும் உணர்ச்சிகளே, அழகுக் கலைகளுக்கு ஆணிவேராகம். மனித அறிவு, மனோபாவம் கற்பனை இவை மூன்றும் ஒரு புள்ளியில் சந்திக்கின்ற போது, நுட்பமான ஒன்று தோன்றி விடுகிறது. அது ஒவ்வொரு இடத்திலும் அதன் தன்மைக்கு ஏற்ப விதவிதமான, அழகு கலையாக பரிணாமம் பெற்றுள்ளது.

***ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்***
***ஏய உணர்விக்கும் என்னம்மை***
***தூய உருப்பளிங்கு போல்வாள்***

என்கின்ற பாடல் மூலம் நம்மவர்களின் கலைகள் 64 வகையானது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

இந்த அறுபத்து நான்கு கலைகளும் தத்துவங்களை அடிப்படையாக் கொண்ட செயல் முறைகளாகும். கலை என்பது தொழிலாகவும், தொழில் என்பது கலையாகவும் பயன்படும் தன்மைக்கேற்ப மாறி நிற்பதும் உண்டு. எடுத்துக்காட்டாக கட்டிடக் கலையின் ஒட்டு மொத்த அழகு வடிவம் "தாஜ்மகால்" இதிலே கட்டுவது என்கினற தொழிலும், அதிலே கட்டப்பட்டதுமான அழகு என்கின்ற கலையும், பின்னி பிணைந்து பிரித்துப் பார்க்க இயலாதபடி அமையப் பெற்றிருப்பது சான்றாகும்.

கலை என்னும் பெயர்ச்சொல் கல் என்னும் வேர்சொல்லின் இருந்து தோன்றியதாகும். மண்ணுக்குள் புதைந்துள்ள பொன்மணிகள் போன்றே கலையானது நம் ஒவ்வொருவர் மனதுக்குள்ளும் மறைந்திருக்கின்றது.

சங்க காலத்தைப் போல நிதானமான அமைதியான வாழ்க்கை முறை, இந்த காலத்தில் அதுவும் இன்றைய நிலையில் எதிர்பார்க்க முடியாதது. ஏன் என்றால் மனித வாழ்க்கை சூழல் அந்த அளவிற்கு இயந்திரத்தனமாக, படு வேகமாகச் சுழன்று கொண்டு இருக்கையிலே எங்கே போய் அழகுக் கலையை அனுபவிப்பது என்பவர்களே அனேகம்.

என்றாலும் உண்மை நிலை என்ன தெரியுமா, உலகில் ஒவ்வொரு நபரும் ஏதோ ஒர் விகிதாச்சாரத்தில் கலையை, அழகை ரசித்து அனுபவித்து ஆக்கிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். இல்லை என்றால் அத்தனை பேரின் வாழ்வும் வெறிச்சோடிக் களையிழந்து காணாமல் போய்விடும்.

மனித மனம் என்பது இயற்கையில் இருக்கும் எல்லையற்ற, அழகுகளைப் பார்த்து அனுபவிப்பதுடன் நிறைவு கொள்வதில்லை. புலன் உணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய ஒலி, வண்ணங்களை வகைப்படுத்தி, இசைப்படுத்தி அழகை படைக்க முயன்று கொண்டே இருக்கிறது. இந்த முயற்சியில் ஈடுபடும் திறனுடையவர்கள் கலைஞர்கள் என்றழைக்கப்படுகின்றனர். இங்கே எல்லா மனிதர்களும் கலைஞர்களாக ஆவதில்லை. என்றாலும் பலர் ரசிக்கக் கூடியவர்களாகவும் சிலர் கலை நுகர்ச்சி சிறிய அளவிலே உள்ளவர்களாகவும் இருக்கின்றார்களே தவிர முற்றும் அழிந்த நிலையிலே யாரும் இருப்பதில்லை.

அழகியலானது சிந்தனை செயலாகும். அது நடைமுறைச் செயல்பாடல்ல. நம்முடைய அன்றாட பிரச்சனைகளில் இருந்து நம்மை மீட்டெடுத்து வருவது அனைத்துமே, அழகுக் கலையே ஆகும்.

**அழகுக்கலைகள் ஐந்து வகைப்படும் அவை**

1. கட்டிடக் கலை 2. சிற்பக்கலை 3. ஓவியக்கலை 4. இசைக்கலை 5. காவியக்கலை

இதிலே கட்டிக் கலை என்பது பயன்கலையைச் சார்ந்தது. பயன்கலைகள் என்பது அழகோடு, நடப்பியல் வாழ்க்கைக்கு உபயோகமுள்ள பொருள்களைத் தருகின்றன. எடுத்துக்காட்டாக, கட்டிடக்கலையை எடுத்துக் கொண்டோமேயானால், அது அழகான தோற்றத்தால் உபயோகப் பயனையும் தருகிறது. ஆனால் நுண்கலைகளோ, அழகுணர்ச்சியை மட்டுமே அளிப்பனவாக அமைந்துள்ளன. இவை அனைத்தும் மனிதனின் புலனுணர்ச்சிகளுக்குத தகுந்தபடி வகுக்கப்பட்டிருக்கின்றன.

பெரும்பாலும் அழகுக் கலைகள் அந்தந்த நாட்டின் இயற்கை அமைப்பு, தட்பவெப்பநிலை, மனோபாவம், சமயக்கொள்கை முதலியவற்றிற்குத் தகுந்தபடியே, வெவ்வேறு விதமாக உருவடைந்திருக்கின்றன.

பல்வேறு சிறப்புக்களை உள்ளடக்கிய கலையை நம் முன்னோர்கள் வழி வழியாக, போற்றி காத்து வந்துள்ளனர். அது போன்று நாமும் கலைகளை பயின்று பாதுகாத்து வரவேண்டியது நமது மிக முக்கியமான பொறுப்பாகும்.

**கட்டிடக்கலை**

காலத்தின் தொன்மைக்கு சான்றாக நிற்கும் கட்டிடக் கலை பல்வேறு சிறப்பம்சங்களை உள்ளடக்கியது ஆகும். கற்காலம் முதல் தற்காலம் வரையிலான நாகரிகத்தின் அளவுகோலாக அடையாளமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. கட்டிடக்கலை என்றால் அது மிகையாகாது. சான்றாக உலக அதிசயங்கள் அத்தனையும் கட்டிக்கலை சார்ந்ததாகவே உள்ளது.



மனித வாழ்வுக்கு அடிப்படையானதாக கருதப்படுவது. உண்ணும் உணவு, இருக்கும் இடம், உடுத்தும் உடை என்பனவாகும். இதிலே அவன் முதலில் உணவை மையமாகக்கியே தனது வாழ்க்கை முறையை அமைத்திருந்தான் அதன் பின்னரே பறவைகளும், விலங்குகளும், பாதுகாப்பு கருதி தனக்கென ஒரிடத்தை உருவாக்கிக் கொள்வதைக் கண்டு, தானும் அது போன்று பாதுகாப்புடன் இருக்க வேண்டும் என்று எண்ணியதின் விளைவே கட்டிடடிக்கலை தோற்றத்திற்கான வித்தானது.

கட்டு மற்றும் இடம் என்கின்ற இரு சொல்லமைப்பு கட்டப்பெற்ற இடம் என்ற பொருளில் அமைந்துள்ளது. அதாவது ஒரு வெற்றிடத்தில் குறித்த அளவுக்கு

உட்பட்டு கட்டப்படும் கலையே கட்டிடக் கலையானது.

உயரம், அகலம், உறுதி பகைவரால் அழிக்க இயலாத அமைப்பு, ஆகிய நான்கும் அமைந்திருப்பதே கட்டிடத்திற்குரிய இலக்கணமாகும். கட்டிடக்கலையானது சமுதாயத்தின் உள்ள பிறகலைகளும், தொழில்களும், நடைபெற இடமளிப்பதாகவும் உள்ளது. எனவே கட்டிடக்கலையானது மனித வாழ்க்கை நடைபெற அவ்வாழ்க்கைக்குத் தேவையான பிற தொழில்களும் மேன்மையடைய அடிப்படையாக அமைந்துள்ளது. இனி கட்டிடக்கலையுடன் தொடர்புடைய சிற்பக்கலை குறித்து சுருக்கமாகப் பார்ப்போம்.



**சிற்ப நூல் கூறும் காலங்களும் கட்டுமானங்களும்**

1. பழைய காலம் என்பது கி.பி.600க்கும் முற்பட்டது. இந்தக்காலத்தில் மரத்தாலும், செங்கலாலும் கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டன.
2. கி.பி.600 முதல் 900 வரை உள்ள காலம், பல்லவர்களால் இந்த காலத்தில் கருங்கல்லால் மட்டுமே கட்டுமானப்பணிகள் நடந்துள்ளது.
3. கி.பி.900 முதல் 1300 வரை உள்ள காலம் சோழர் காலம். இந்தக்காலத்தில் குறிப்பாக சிவன், அம்மன், கோயில் உருவாக்கப்பட்டன.
4. கி.பி.1300 முதல் 1500 வரை உள்ள காலம் பாண்டியர்கள் காலம்.
5. கி.பி.1500 முதல் 1700 வரை உள்ள காலம் விஜயநகர அரசர்கள் காலம்.

பாண்டியர் கால கட்டுமானங்கள் பெரும்பாலும் பிரம்மாண்டமாகத் தோற்றுவிக்கப்பட்டன. 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சிதம்பரம் கிழக்கு கோபுரம், திருவானைக்காவலில் உள்ள சுந்தரபாண்டியன் கோபுரம் போன்றவை இன்றும் பாண்டியர்கால கட்டுமானங்களுக்கு சான்றாகத் திகழ்கின்றன.

விஜய நகர அரசர்கள் கால கட்டுமானங்கள், கல்யாண மண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள், அம்மனுக்கு தனி கருவறை, நான்கு கோபுர வாயில் அமைப்பு போன்ற தனித்தன்மை படைத்தவையாகவும் மிகவும் அழகுணர்ச்சியுடன், பல அலங்கார வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டன.

அதன் பின் வந்த நாயக்கர்கால கட்டுமானங்களின் சான்றாக இருப்பது மதுரை மீனாட்சி கோயில், சிதம்பரம், திருவண்ணாமலை, திருவல்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் போன்றவையாகும்.

இப்படி தென்னிந்திய திராவிடக் கட்டிடக்கலையின் கட்டுமானங்களின் காலங்களில் மாறுதல் இருந்தாலும் அந்த காலத்தில் கட்டப்பட்ட கட்டுமானத்தில பெரிய மாற்றம் ஏதும் இல்லை. சிறு, சிறு மாற்றங்கள் மட்டுமே ஏற்பட்டதே தவிர பெரிய மாறுதல்கள் ஏதும் நிகழ்ந்துவிட வில்லை என்பதே உண்மை.

தென்னிந்திய திராவிடக் கட்டடக்கலையானது, சேர கோழ, பாண்டிய பல்லவ, விஜய நாயக்கர் கால ஆட்சியுடன் பெரும்பாலும் முடிந்து விட்டது என்றே நினைக்கத் தோன்றுகின்றது. அதன் பிறகு பெரிய அளவிலே தென்னிந்திய திராவிடக் கட்டடக்கலை வளர்ச்சியை நோக்கி செல்லவில்லை என்பதே ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கின்றது.

**ஒவ்வொரு நாட்டு கட்டிடக்கலையும் ஒரு சிறப்புத் தன்மையுடன் விளங்குகிறது என்பதற்கு சான்றாக,**

1. கிரேக்கர்களின் கட்டடங்கள் தூய்மைக்கு உதாரணமானதாகும்.
2. உரோமனியர்களின் கட்டடங்கள் அறிவியல் வளர்ச்சிக்குச் சான்றாகும்.
3. பிரெஞ்சுக்காரர்களின் கட்டடங்கள் மறுமலர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகும்.
4. இந்தியர்களின் கட்டடங்கள் ஆன்மிகத்திற்கு சாட்சியாகும்.

- முழுவதும் மரத்தினாலோ, செங்கல்லினாலோ அல்லது கருங்கல்லினாலோ கட்டப்பட்ட கோயில்களுக்கு சுத்தக்கட்டிடம் என்று பெயர்.
- இரண்டு பொருள்களைக் கலந்து அமைக்கப்பட்ட கட்டிடம் மிஸ்ரகட்டிடம்.
- இரண்டுக்கு மேல் பட்ட பொருள்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கட்டிடம் சங்கீரணம் என பெயர் சூட்டப்பட்டன.

## கோயில்களின் கட்டமைப்பு

**1. மரக்கோயில்கள்**

அன்றைக்கு மரத்தினால் கோயில்கள் கட்டப்பட்டதால், அவை விரைவில் பழுதடையாது இருக்க பாதுகாப்பாக செம்புத்தகடுகளையும், பொற்தகடுகளையும் கூரையாக் வேய்ந்தார்கள்.

**2. செங்கல் கட்டுமான கோயில்கள்**

மரத்திற்கு பின் செங்கல் சுண்ணாம்பு கொண்டு கட்டத் தொடங்கினார்கள் என்றாலும் அவை பெரும்பாலும் 200 அல்லது 300 ஆண்டுகளுக்கு மேல் நிலைபெற்று இருக்கவில்லை. கி.பி.600 முற்பட்ட காலத்தில் செங்கல் கட்டுமானம் தோன்றியது.

**3. குகைக்கோயில்கள்**

குகைக் கோயிலை அமைக்கும் புதிய முறையை ஏற்படுத்தி கட்டடக்கலையில் ஒரு புரட்சியை உண்டாக்கியவன் மகேந்திரவர்மன் ஆவான். இக்குகைக் கோயில்கள் சென்னை, காஞ்சிபுரம், திருச்சி, என பல இடங்களில் சான்றாக இன்றும் உள்ளன. இவை கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டிருக்கலாம் என்கிறார்கள்.

**4. கற்றளிகள் (கற்கோயில்கள்)**

கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் இறுதியில் அரசாண்ட மன்னன் இரண்டாம் நரசிம்மவர்மன் கால்த்தில் கருங்கற்களை ஒன்றின்மேல ஒன்றாக அடுக்கிக் கட்டப்படும் கற்கோயில்கள் உருவாயின. சான்றாக மகாபலிபுரம், காஞ்சிபுரம், கயிலாயநாதர் போன்ற கோயில்களாகும். ஏறத்தாள 1200 ஆண்டுகள் கடந்தும் இன்றும் இக்கோயில்கள் நிலைத்திருப்பது பிரமிப்பூட்டுவனவாகவும் இருக்கிறது.

**சங்க கால கட்டிடக்கலை நூல்கள் சில**

நிலம் எவ்வாறு இருக்க வேண்டும், அதை எபந்த முறையில் பரிசோதிப்பது மற்றும் கட்டட அமைப்பில் உள்ள பலவித



நுணுக்கங்கள் எவை, அளவு முறைகள் என்ன என்ன முதலிய செய்திகளை பற்றிய குறிப்புக்கள் உள்ளடக்கிய முறைகளுக்கு வாஸ்து சாத்திரம் என்று பெயர் இட்டிருந்தனர்.

அந்த வகை சார்ந்த சாத்திர நூல் இரு வகைப்படும். ஒன்று மயன் என்ற ஒப்பற்ற தச்சனாகும். அதாவது கம்பர் தனது இராம காவியத்திலே குறிப்பிடும் இராவணனின் மனைவி மண்டோதரியின் தந்தையாக மயன் என்ற மாபெரும் தமிழன்தான். மகாபாரதத்தில் பஞ்சபாண்டவர்களுக்கு அரக்கு மாளிகை கட்டித் தந்ததாகவும் கூறப்படுகின்றது. அப்போப்பட்ட மயன் எழுதிய நூல்கள்தான் “மயமதம்” என்றானது. மற்றது விஸ்வகர்மா என்ற தெய்வத்தச்சனால் இயற்றப்பட்டதாகும்.

மயமதம் தென்நாட்டில் சிறப்பாகத் தமிழ்நாட்டில் பின்பற்றப்படுவதாகும். விஸ்வகர்மா எழுதிய விஸ்வகர்மீயம், இந்தியாவின் வடபகுதி மக்களால் பெரிதும் பின்பற்றப்டுவதாகும். இந்த இரு நூல்களைக் கொண்டு பல்வேறுபட்ட நூல்கள் பின்னாளிலே தோன்றலாயின. சான்றாக புகழ்பெற்ற போகி மன்னன் தானே எழுதிய “சமராங்கன் சூத்திரதாரம்” என்னும் வாஸ்து நூலாகும். அதே போல் கேரள தேசத்திலே “தந்திர சமுச்சயம்” என்ற நூலும் எடுத்துக்காட்டாக அமைகின்றன.

**கட்டடக்கலை வல்லுநர்கள் (மனை வகுப்பார்)**

அன்றைக்கு ஒரு தொழில் செய்பவனே தான், செய்யும் தொழிலுக்கு உரிமை உடையவனாகவும், இருந்தான். அந்தக்காலத்தில் தொழில் செய்வதில் கடும் உழைப்பு, பொறுப்புணர்ச்சி, சுதந்திரமனப்பான்மை, ஆர்வம் முதலிய தேவைகளை உள்ளடக்கியும் இருந்தமையால் தொழில்கள் நேர்மையுடன் நேர்த்தியாகவும் செய்யப்பட்டன

**சங்ககால கட்டஅமைப்பு மூன்று பெரும் பிரிவுகளாக கொள்ளலாம்.**

1. கோயில் 2. அரண்மனை 3. பிறகட்டுமானங்கள்

தொடக்க காலத்தில் கோயில்கள் மரத்தினலே கட்டப்பட்டது. இன்றும் அதுபோல் கேரளம் போன்ற பகுதிகளிலே கட்டப்படுகின்றது. பின்னர் களிமண் சுவர் அமைத்து மரத்தால் அதன் மேல் கூரை வேயப்பட்டது. அதன் பின்னர் சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமாக மாறின. இறுதியாக கருங்கல்லால் முழுவதும் கட்டப்பட்டன. இது போன்றே அரண்மனையும், பிற கட்டுமானங்களும் படிப்படியாக வளர்ச்சி நிலை எய்தின.

தமிழர்களின் கட்டிடக் கலை சிறப்பை முழுமையாக அறிவதற்கு சான்றாக இருப்பது சிந்து சமவெளி நாகரிகத்தில் அமைந்துள்ள மொகஞ்சதரோ, ஹரப்பா என்கின்ற இருநகரங்களின் அமைப்பே போதும்.

**தெருக்களின் அமைப்பு**

பெரும்பாலும் தென் கிழக்கு வட கிழக்கு பருவகாற்றை கருத்தில் கொண்டே, நல்ல காற்றோட்டத்தை மையமாக்கி தெருக்கள் அமைக்கப்பட்டுள்ளன. காற்று தெருவின் அகன்ற தெருக்களில் வீசும் போது குறுக்கே உள்ள சிறிய தெருக்களிலும் புகுந்து எல்லா மக்களுக்கும் நற்காற்றை நுகர வசதியாக அமைக்கப்பட்டது. தெருக்களின் இருபுறமும், நடைபாதை அமைப்பு இரு சாலைகள் சந்திக்கும் முனையினை வளைவு வடிவத்தில் அமைத்தல் போன்ற நுட்பத்தையும் அங்கு காண முடிகின்றது.

**கால்வாய்** அமைப்பு

ஒவ்வொரு வீட்டில் இருந்தும் வடிகால்வாய் வழியே கழிநீருடன் வரும் குப்பை கூளங்கள் தாழிகளில் வந்து விழும்படி அமைத்து அந்தத் தாழிகளில் அடிப்பாகத்தில் இருக்கும் சிறு துளை வழியே கழிவு நீர் தொட்டியில் நிரம்பி, தெருக்கால்வாய்களில் கலக்கும்படி அமைத்திருந்தனர். மேலும் சுவருக்குள்ளேயே கழிவுநீர் குழாய்களை தெரியாத வண்ணம் அமைத்திருந்தனர். இன்றைக்கு இருக்கும் பாதாளச் சாக்கடை போன்றே அன்றைக்கும் மூடிய நிலை கழிவு நீர் கால்வாய்கள் அமைக்கப்பட்டு உள்ளன. பெரும்பாலான வீடுகளில் மலம் கலப்பதற்கு உரிய இடம் கட்டப்பட்டது. மேலும் சில மாளிகைகளில் மேன் மாடங்களிலேயே இத்தகைய வசதிகள் அமையப்பெற்றிருந்தன.









சிறிய இல்லம் என்பது 4,5 அறைகளைக் கொண்டதாக இருக்கிறது. உயரமான மேட்டுப் பகுதிகளிலேயே பல்வேறு நகரங்களை நிர்மானித்து இருந்தனர். மேலும் அடுக்குமாடி குடியிருப்புகளும் காணப்படுகின்றன. சுமார் ஏழு மாடி வரையிலான கட்டுமானங்கள் உள்ளன.

கட்டிடச் சுவர்கள் ஓரளவில் அமையப்பெறவில்லை. பெரிதும் சிறுதுமாக உள்ளன. பெரிய முற்றமுடைய இல்லங்கள், பல குடும்பங்கள் வாழ்ந்த வீடுகள், செல்வர்தம் மாட மாளிகைகள், அரண்மனைகள் போன்று தனித்தனியாக சமையல் அறை, நீராடும் அறை என காணப்படுகிறது.

ஒரு நகரம் நன்முறையில் அமைந்துள்ளது எனில் அது பரந்த இடத்தில் அமைந்திருத்தல் வேண்டும். நீண்டு அகன்ற தெருக்களைப் பெற்றிருத்தல் வேண்டும். எல்லாப் பாதைகளும் விலக்கின்றித் தூய்மையாக இருக்க வேண்டும். கழிவுநீரைச் செவ்வனே கொண்டு செல்லுமும் ஒழுங்கான கால்வாய்கள் அமைந்திருத்தல் வேண்டும். பொது மக்கள் பயன்படும் வண்ணம் பொது கட்டுமான இடங்கள் இருத்தல் வேண்டும். இப்படிப்பட்ட எல்லா வகை வசதிகளும் நன்கு அமைப்பட்ட நாகரிக வாழ்வை வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள் என்பதில் பெருமிதம் கொள்வோம்.

**நகரமைப்புக்கு ஒரு சான்று**

சேர, சோழ, பாண்டிய கொங்கு என நான்கு மண்டலங்களை நம்மவர்கள் உருவாக்கி, ஒவ்வொன்றுக்கும் நான்கு எல்லைகளை வெகு அழகாகவும் பொருத்தமாகவும் வியப்படையும் வகையிலும் மிக நேர்த்தியாக பிரிக்கப்பட்டு உள்ள விதம் தமிழரின் புவியியல், வானியல் அறிவியல் திறனை பறைசாற்றுகின்றது. ஆறுகளும் மலைகளும் என்றும் நிரந்தரமாக இருக்கும் என்பதால் அவைகளை மையப்படுத்தி அமைத்த விதம் கவனிக்கத்தக்கதாகும்.

இது மட்டுமல்ல வான் முட்டும் கோபுரங்கள், நெடிதுயர்ந்த கோயில் ரதங்கள், தரையில் அமைந்த கோட்டை கொத்தளங்கள், மலையில் அமைந்த துருவங்கள், ஆற்றைக் குறுக்காட்டும் கல்லணைகள், அதிலிருந்து புறப்படும் கால்வாய்கள், கடல்போன்ற ஏரிகள், வளம் கொழிக்கும் வயல்கள் என சொல்லிக் கொண்டே போகலாம். அந்த அளவிற்கு எண்ணிலடங்காது அவர்களின் பொறியியல் திறனுக்கு அளவே கிடையாது.

இந்திய கட்டடக்கலை முறையில் தமிழ் நாட்டுக் கட்டடக்கலை தனிச் சிறப்பு வாய்ந்ததாக விளங்குகிறது. தென் இந்திய கட்டிடக் கலை முறையைத் திராவிடக் கட்டடக்கலை முறை என்பார்கள். தென்னிந்திய கட்டிடக்கலை பல்லவர் காலத்தில் குகைக் கோயில்களாக அரும்பி, சோழர்காலத்தில் விண்ணை முட்டும் மாபெரும் கோயில்களாக மலர்ந்து, பல்லவர் காலத்தில் நுட்பமுடனும் எளிமையுடனும் அடக்கமாக காட்சி அளித்து முன்னேற்றம் கண்டது.

இப்பேர்ப்பட்ட ஒரு வடிவமைப்புக்கலை இன்றைய தமிழக சமூகத்தினராலே மறக்கப்பட்டு சிலரால் மறைக்கப்பட்டு வருகின்றது. அந்த மனித வளத்திற்கான மரபு முறைகளை அற்புதமான அந்த அழகுக் கலைகளை போற்றி பாதுகாக்க வேண்டியது நமது ஒவ்வொருவரின் தலையாயக் கடமையாகும்.

இறுதியாக ஒரு கட்டிடம் கட்டுவதற்கு என்ன என்ன தேவை என்றால்

1. கலையுணர்வுத் தன்மை மிகுந்திருத்தல் வேண்டும்.
2. பொறியியல் திறன் மேம்பட்டு இருக்க வேண்டும்.
3. மெய்யறிவு எனும் இயற்கையறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்கண்ட முக்குணமும் ஒருங்கே அமையப் பெற்றவரே காலத்தைக் கடந்து நிற்கும் கட்டுமானத்தைத் தோற்றுவிக்க வல்லவர் ஆவார். அப்பேர்பட்டவர்கள் தோற்றுவித்த கட்டுமானங்களே இன்றைய அளவில் உலக அதிசயங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டவைகளாகத் திகழ்கின்றன என்பதே உண்மையாகும்.

◆ ◆ ◆

# SOIL SCIENCE BEHIND THE PREPARATION OF CRICKET PITCH



**DR. Colonel. P Nallathambi.**
**Ph.D (Structural Engg), ME, MBA, FIE, FIV)**

Millions of people watch the cricket match but very few know about the preparation of cricket pitch. A huge amount of money invested for the hiring of payers, utilisation of big stadium, involvement of thousands of spectators, franchisees, media and government machinery' in each cricket match. The complete entertainment or sports activities of cricket is mainly concentrated on the pitch of overall size 22.5m x 3.1m. The ball having 160 Gms of weight and fast bowler bowl at a maximum of 150KMPH speed or spin the ball at 100 KMPH which touches the firm ground and raise to the batsman for playing. A good pitch balances bat and ball in a cricket match, interesting results of the game depend on the condition of the pitch. So, the scientific way of preparation of cricket pitch and the process involved are discussed in this paper.

It is said that making a cricket pitch is an art which has been transformed from one generation of Groundsman to another since the inception of the game of cricket in India by the British colonial rulers. Nearly a century-old traditional and conventional style of selecting a pitch soil and its layering concepts were based only on the trial and error technique, adopted by the groundsman who lacked the desired scientific knowledge on improving the pitch.

Soils are of immense importance for understanding the wide variability existing in different pitch in India having different climatic zones. Synergetic efforts of the BCCI along with the associated State Cricket Associations and the Central and State Agricultural / Engineering colleges are involved in producing magical results by understanding the nature, behaviour of Indian pitches and thereby improvising them for better results of the cricket match.

Nowadays, the Board of Cricket for Control in India (BCCI) along with the associated State Cricket Associations has initiated a special campaign to find out the gap between the traditional style of pitch making process and the different scientific methods based on research and developments. Indian Institute of Technology, Mumbai, through BCCI, has analyzed almost all the pitch soils used by the major cricket stadiums of India for physical and chemical parameters. Such scientific ways based on the recent research and developments, which can bring entirely different results even in the same pitch with the same microclimate as well as macro-climatic conditions. Therefore, the conventional or traditional mind-set and style of making pitches without having scientific and logical reasons should be changed as there is always a science behind the art of pitch making.








**Cricket ball.** A cricket ball is a hard solid ball having a cork inside, which is covered by pure leather and production of these balls are regulated by cricket standards. The ball that is used in international matches is 159.9 to 163 Grams heavy and this ball aids the bowler to get the speed and bounce against the pace. In today cricket, balls are developed scientifically and mechanically, considering better aerodynamics in the air and many other climatic factors. In the past, cricket ball was handmade and heavier than current balls. Even after providing proper clay and silt content, weather condition and grass over the pitch are in favour of bounce and desired speed. Also, the new ball is very good for bouncing and swing, whereas the old ball does not give that bounce and speed but it is in favour of spin bowlers. In test matches, the old ball is replaced with a new ball after specified overs. The cricket game depends on many factors including the cricket ball, which has significant effects on the results.

